சென்னையில் பள்ளிவாசல்கள் மீது தொடர் தாக்குதல்கள்! தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு எங்கே?

சிறுபான்மை மக்களின் வழிபாட்டுத் தலங்களுக்கு பாதுகாப்பு எங்கே?

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, அக். 29-

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நேற்று மாலை சென்னை கோயம்பேடு ஜெய்நகர் பகுதியில் அமைந்துள்ள மஸ்ஜித்இஷா நூர் பள்ளிவாசலுக்குள் புகுந்த ஒரு நபர் அங்கு பணியிலிருந்த இமாமைத் தாக்கி, பள்ளிவாசல் பொருட்களைச் சேதப்படுத்திய சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பள்ளிவாசலுக்குள் உருட்டுக்கட்டையுடன் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியதாகக் கைது செய்யப்பட்டுள்ள நபர் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக காவல்துறை உயர் அதிகாரிகளைத் தொடர்புகொண்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினேன். தமுமுக நிர்வாகிகள் மற்றும் பள்ளிவாசல் ஜமாஅத் நிர்வாகிகளும் உரிய நடவடிக்கைக்காகக் காவல்துறையிடம் வலியுறுத்தினர்.

ஒரு பதினைந்து நாட்களுக்குள் சென்னையில் பள்ளிவாசல் மீது நடைபெறும் இரண்டாவது தாக்குதல் இது என்பது மிகுந்த கவலையளிக்கிறது.

கடந்த அக்டோபர் 14ஆம் தேதி சென்னை வடபழனி கங்கை அம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள பள்ளிவாசல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று காவல் துறை தரப்பில் கூறப்பட்டது. தற்போது ஜெய்நகர் பள்ளிவாசலில் மற்றொரு தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

தொடர்ச்சியாக நடைபெறும் இத்தகைய சம்பவங்களைத் தனித்தனி நிகழ்வுகளாக மட்டும் கருதிவிட்டு, ஒவ்வொரு முறையும் குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் மனநிலையைச் சுட்டிக்காட்டி விவகாரத்தை முடித்துவிட முடியாது. இத்தகைய தாக்குதல்களின் பின்னணி, நோக்கம், திட்டமிடல் மற்றும் சாத்தியமான தொடர்புகள் குறித்து சிறப்பு புலனாய்வு குழு அமைத்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

பள்ளிவாசல்களுக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தும் அளவுக்கு சில ருக்குத் துணிச்சல் த.வெ.க. ஆட்சியில் ஏற்படுவது ஏன்? இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க காவல்துறை என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? இந்தக் கேள்விகளுக்கு அரசு பதிலளிக்க வேண்டும்.

ஜெய்நகர் பள்ளிவாசல் தாக்குதலில் கைது செய்யப்பட்ட நபர் மீது, விசாரணையில் வெளிப்படும் ஆதாரங்கள் மற்றும் சட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இதுபோன்ற தாக்குதல்கள் நிகழாமல் தடுப்பதற்கான அவசியம் கருதி தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அவரைக் காவலில் வைக்க காவல்துறை பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் எந்த மதத் தினரின் வழிபாட்டுத் தலமாக இருந்தாலும் அதன் பாதுகாப்பில் சமரசம் இருக்கக் கூடாது. பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்கள் தொடர்வதைத் தடுக்கத் தமிழக அரசு உடனடியாக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு தாக்குதலை அலட்சியப்படுத்தினால், அடுத்த தாக்குதலுக்கு அது துணிச்சலாக மாறிவிடக் கூடாது. சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும்; சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

மகளிர் அணி, மகளிர் தொண்டரணி ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கடலூர், அக்.29-

கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில் 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணிய ளவில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு பெண்கள் - குழந்தைகள் பாதுகாப்பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட தி.மு.க. (கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு மாவட்ட திமுக) மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு, கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. விடுத் துள்ள வேண்டு கோள் வருமாறு:-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவர், கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., அறிவுறுத்தலின்படி, வருகின்ற 31.10.2026 சனிக்கிழமை, காலை 10.00 மணியளவில், கடலூர் மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் அருகில், கடலூர் மாநகர மேயர் திருமதி.சுந்தரி ராஜா தலைமையில், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.த.அமுத ராணி, கடலூர் கிழக்கு மாவட்ட திமுக மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திருமதி.ப.மனோ ரஞ்சிதம் கடலூர் கிழக்கு மாவட்ட துணை செயலாளர் திருமதி.சுதாசம்பத், பொதுக்குழு உறுப்பினர் திருமதி. ர.மஞ்சு, கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி. ஜெயந்தி நடராஜன், கடலூர் மேற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் திருமதி.இந்துமதி மனோகரன், கடலூர் மேற்கு மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் திருமதி.ஆனந்தி சரவணன், பொதுக்குழு உறுப்பினர் திருமதி.செந்தமிழ்செல்வி கருப்புசாமி ஆகியோர் மற்றும் மாவட்ட மகளிர், மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள் முன்னிலையில், பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழ்நாட்டை படுகுழியில் தள்ளி உள்ள த.வெ.க அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ., கண்டன உரையாற்ற உள்ளனர்.

அது சமயம் ஆர்பாட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட - மாநகர - ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக மகளிர் துணை செயலாளர்கள், முன்னாள் இந்நாள் மகளிர் உள்ளாட்சி பிரதிநிதிகள், மகளிர் மாநகர மேயர், பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்கள், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள், துணை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், மாவட்ட ஒன்றிய குழு உறுப்பினர்கள் மற்றும் கழக மகளிர் அணியினர், மகளிர் தொண்டர் அணியினர், மகளிர் அணி உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், தோழர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார்.

சட்டம் ஒழுங்குச் சீர்கேடு - பெண்கள், குழந்தைகள் பாதுகாப்பின்மை - விலைவாசி உயர்வைக் கண்டித்து

தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தை கழக மகளிர் மகத்தான வெற்றி பெறச் செய்வோம் வாரீர்!

கழக மகளிர் - மகளிர் தொண்டர் அணியினருக்கு அணியின் செயலாளர்கள் ஹெலன் டேவிட்சன் - நாமக்கல் ப.இராணி வேண்டுகோள்!

சென்னை, அக்.29-

தமிழ்நாட்டில் நிலவும் சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, பெண்கு ழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற சூழல் மற்றும் விண்ணைத் தொடும் விலைவாசி உயர்வை கண்டித்து தி.மு.க. கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி 31.10.2026, சனிக்கிழமை அன்று நடைபெறும் தி.மு.க. மகளிர் அணியின் கண்டன ஆர்ப்பாட்டத்தை மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மாவட்டச் செயலாளர்களோடு ஆலோசனை செய்து சிறப்பாக ஏற்பாடு செய்து வெற்றி பெறச் செய்வீர்! என மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட் சன், மகளிர் தொண்டரணி செயலாளர், நாமக்கல் ப. இராணி ஆகியோர் விடுத் துள்ள அறிக்கையில் வேண்டு கோள் விடுத்துள்ளார்கள்.





அவர்களின் அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் அமைதிப் பூங்கா இன்று குற்றவாளிகளின் புகலிடமாக மாற்றப்பட்டுள்ளது. அன்றாடம் செய்தித் தாள்களைத் திறந்தால் கொலை, கொள்ளை, வழிப்பறி மற்றும் போதைப் பொருட்களின் நடமாட்டம் குறித்த செய்திகளே ஆக்கிரமித்துள்ளன. காவல் துறையின் கைகள் கட்டப்பட்டு, சட்டம்-ஒழுங்கு முற்றிலுமாக முடங்கிக் கிடக்கிறது. பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் எவ்வித உத்தரவாதமும் இல்லாத அவல நிலை இன்று தமிழகத்தில் நிலவுகிறது.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்" போற்றப்பட வேண்டிய இந்த மண்ணில், இன்று நமது பெண் குழந்தைகளும், பெண்களும் வீட்டை விட்டு வெளியே சென்று பாதுகாப்பாக வீடு திரும்புவது பெரும் சவாலாக மாறியுள்ளது. பள்ளிக் குழந்தைகள் முதல் பணிக்குச் செல்லும் பெண்கள் வரை சமூக விரோதிகளால் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீதான அரசின் அலட்சியப் போக்கும், குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கத் தவறிய நிர்வாகத் திறமையின்மை யுமே இந்த பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கு முழுக் காரணமாகும். ஒருபுறம் பாதுகாப்பற்ற சூழல் என்றால், மறுபுறம் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை நசுக்கும் விலைவாசி உயர்வு. அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையும், சிலிண்டர், பெட்ரோல், டீசல் விலைகளும் நாளுக்கு நாள் விண்ணைத் தொட்டு வருகின்றன. குடும்பத்தை வழிநடத்தும் இல்லத்தரசிகள் ஒவ்வொரு நாளும் பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து, தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். இந்த விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அரசு எவ்வித ஆக்கப்பூர்வமான நட வடிக்கையும் எடுக்கவில்லை.

நமது உரிமைகளை மீட்டெடுக்கவும், தமிழகப் பெண்களின் பாதுகாப்பிற்கு அரணாக நிற்கவும், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், மகளிர் அணி பொறுப்பாளர் கழக துணை பொது செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி அவர்கள் ஆலோசனைப்படியும் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் மாவட்ட செயலாளர்களோடு ஆலோசனை செய்து சிறப்பாக ஏற்பாடு செய்து வெற்றி பெற செய்வீர்!

இவ்வாறு மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைப் பெரியாறு அணையில் - தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டிய

கம்பம் கே.எஸ். அப்பாஸ் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக்.29-

கம்பம் கே.எஸ். அப்பாஸ் மறைவுக்கு - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட கம்பம் கே.எஸ். அப்பாஸ் அவர்கள் மறைந்த செய்தி மிகுந்த துயரமளிக்கிறது.

உழவர்களின் வாழ்வாதாரம், நீர்வளப் பாதுகாப்பு உள்ளிட்ட பல தளங்களில் களப்பணியையும் கருத்தியல் தெளிவையும் இணைத்துச் செயலாற்றிய அவரது பிரிவால் துயருற்றுள்ள குடும்பத்தினருக்கும், உடனிருந்து களமாடிய தோழர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாவலர்

கம்பம் அப்பாஸ் மறைவு!

கழக முன்னணியினர் - விவசாய சங்கத்தினர் அஞ்சலி!

தேனி, அக்.29-

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாவலர் கம்பம் அப்பாஸ் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தி யை அறிவிக்க வருந்துகிறோம்.

இதுகுறித்து மல்லை சத்யா விடுத்துள்ள இரங்கல் அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

முல்லைப் பெரியாறு அணை காக்க அரசியல் நோக்கம் இல்லாமல் சமரசம் இல்லாமல் போராடி வந்த ஐயா கம்பம் அப்பாஸ் அவர்கள் இயற்கை எய்தினார் என்று செய்தி அறிந்து கவலையுற்றோம்.


இங்கிலாந்து நாட்டின் பொறியாளர் (ராயல் என்ஜினியர்) பென்னி குக் அவர்கள் மேற்கு நோக்கி பாயும் தண்ணீரை திருப்பி முல்லைப் பெரியாறு அணை கட்டி தென் தமிழ்நாட்டின் ஐந்து மாவட்ட (தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம்) மக்களின் துயர் துடைக்கும் வகையில் ஜீவநதியாக இன்றுவரை இருந்து வருகிறது.

அந்த அணையை உடைக்க உள்நோக்கத்துடன் சகோதர மாநிலம் கேரளா எடுத்த நடவடிக்கைகளை மக்கள் மத்தியிலும் நீதி மன்றத்திலும் சமரசம் இல்லாமல் போராடி வந்தார் ஐயா கம்பம் அப்பாஸ் அவர்கள்.

முல்லைப் பெரியாறு அணை சென்னை மாகாணத்திற்கும் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கும் 999 ஆண்டுகள் ஒப்பந்தம் போடப்பட்டது தேவைப்படின் மீண்டும் 999 ஆண்டுகளுக்கு ஒப்பந்தத்தை நீடித்துக் கொள்ளவும் உரிமையுடன் உள்ள அணையின் உரிமையை பறிக்கும் வகையில் பொய் செய்திகளைப் பரப்பி வரும் கேரளா அரசு எடுக்கும் நடவடிக்கைகளை அரசியல் நோக்கம் இன்றி மக்கள் மத்தியிலும் நீதிமன்றத்திலும் சட்டப் போராட்டம் நடத்தி வந்தார் ஐயா கம்பம் அப்பாஸ் அவர்கள்.

கேரளா மாநில முதல்வராக இருந்த தோழர் அச்சுதானந்தன் அவர்கள் பத்திரிகையாளர் சந்திப்பின் போது நாட்டு விடுதலைக்கு முன்பு வெள்ளைக்காரன் போட்ட ஒப்பந்தத்தை விடுதலைக்குப் பின்னரும் நாம் பின்பற்ற வேண்டுமா என்று கேட்டு இருந்தார். அப்போது மதுரையில் நடைபெற்ற ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தில் அதற்கு பதிலளிக்கும் வகையில் நான் பேசும் போது சொன்னேன் கேரளா மாநில முதல்வர் தோழர் அச்சுதானந்தன் அவர்கள் வெள்ளைக்காரன் போட்ட ஒப்பந்தத்தை நாம் ஏன் மதிக்க வேண்டும் என்று கேட்டு இருக்கின்றார் அப்படி என்றால் வெள்ளைக் காரன் இணைத்த இந்தியாவில் நாம் ஏன் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் விடுதலைக்கு முன்பு போல் தனித்தனி ராஜ்ஜியங்களாக பிரிந்து போகலாமே என்று பேசினேன் சரியான பதிலடி என்று சொல்லி பாராட்டினார்.

அதேப் போன்று சென்னை விருகம்பாக்கம் பிரசாந்த் திரையரங்கில் திரையிட இருந்த டேம் 999 திரைப்படம் ஓடவிடாமல் எனது தலைமையில் தடுத்து நிறுத்தி போராடி திரைப்பட சுருள் பெட்டிகளை தூக்கி வந்து போட்டு போராட்டம் நடத்தி கைதாகி சென்னை புழல் சிறையில் ஐந்து நாட்களுக்குப் பின்னர் விடுதலையான போது கைபேசியில் அழைத்து பாராட்டி தேனி மதுரை மாவட்டத்தில் ஐந்து மாவட்ட முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் பாராட்டு விழா நடத்தி மக்களிடம் போராட்ட உணர்வை தூண்ட வேண்டும் என்று பேசி ஊக்கப்படுத்தினார்.



முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாவலராக இருந்த ஐயா கம்பம் அப்பாஸ் போன்ற ஆளுமைகள் தலைமுறைக்கு ஒருமுறை பூக்கும் மூங்கில் பூவைப் போன்று அரிதாகத்தான் தோன்றுவார்கள். அவரின் மரணம் தமிழ் நாட்டிற்கு பேரிழப்பு. முல்லைப் பெரியாறு அணை இருக்கும் வரை ஐயா கம்பம் அப்பாஸ் அவர்களின் பெயரும் நிலைத்து நிற்கும். அவரை இழந்து வாடும் அவர் தம் குடும்பத்தினருக்கும் முல்லைப் பெரியாறு அணை பாசன விவசாயிகள் சங்க நீர்வாகிகளுக்கும் திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மல்லை சி.ஏ. சத்யா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

இச்செய்தியறிந்ததும் கழக முன்னணியினரும் விவசாய சங்கத்தினரும் மறைந்த கம்பம் அப்பாஸ் அவர்களின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

தேனி மாவட்டம் - ஆண்டிப்பட்டியில் காவலர்களைத் தாக்கிவிட்டு

சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பி ஓட்டம்!

சந்தி சிரிக்கும் அமைச்சர் 'கமிஷன் குமாரின்' நிர்வாக லட்சணம்!

தேனி, அக்.29-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே தேக்கம்பட்டியில் உள்ள மாவட்ட சிறையில், உடல்நிலை சரியில்லை என நாடகமாடி சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டு 17 கைதிகள் தப்பியோடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே தேக்கம்பட்டியில் மாவட்ட சிறை அமைந்துள்ளது. இந்தச் சிறையில் ஒரே அறையில் 17 கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (அக்டோபர் 26) இரவு, அந்த அறையில் இருந்த கைதி ஒருவருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டதாகச் சிறைக் காவலர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சிறைக் காவலர்கள் அறையின் கதவைத் திறந்து உள்ளே சென்றுள்ளனர். அப்போது அங்கு மறைந்திருந்த கைதிகள், காவலர்களைத் திடீரெனத் தாக்கிவிட்டு சிறையிலிருந்து தப்பியோடியதாக கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் சிறைக் காவலர் ஒருவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், மேலும் இரண்டு காவலர்கள் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. காயமடைந்த காவலர்கள் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பியோடியதைத் தொடர்ந்து தேனி மாவட்டம் முழுவதும் போலீசார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். தப்பியோடிய கைதிகள் கேரளாவுக்குச் சென்றிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், தமிழக - கேரள எல்லைப் பகுதிகளில் தீவிர வாகன சோதனை நடத்தப்பட்டு வருகிறது. மேலும், தேனி மாவட்டத்தில் உள்ள ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களிலும் போலீசார் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் குறித்து தகவல் அறிந்த தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரவீன் கவுதம், தேக்கம்பட்டி சிறைக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். சிறை வளாகத்தைச் சுற்றி 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தேனி மாவட்ட போலீசாருடன் திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட அண்டை மாவட்டங்களைச் சேர்ந்த போலீசாரும் இணைந்து தப்பியோடிய 17 கைதிகளைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டு ஒரே நேரத்தில் 17 கைதிகள் தப்பியோடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தேனி சிறையிலிருந்து 17 கைதிகள் தப்பியோடியதைத் தொடர்ந்து, அண்டை மாவட்டமான திண்டுக்கல்லிலும் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திண்டுக்கல் மாவட்டத்தில் 16 இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு, அனைத்து வாகனங்களும் சோதனை செய்யப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட முள்ளூர் பகுதியில், குடிநீர் வசதி ஏற்படுத்தித் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதையடுத்து, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா அரசு அதிகாரிகளுடன் அப்பகுதிக்குச் சென்று, அப்பகுதியில் ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆழ்துளைக் கிணற்றை விரைவாகச் சீரமைத்து, பொதுமக்களுக்குத் தடையின்றி குடிநீர் கிடைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வில் உதவிப் பொறியாளர் கலியகுமார், கழக நிர்வாகிகள் ஆதி ஈஸ்வரன், நாகராஜன், இராஜேந்திரன், கழக உடன்பிறப்புகள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் உடனிருந்தனர்.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு!

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், மணமேல்குடி வடக்கு ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் **ஆர். ரித்தீஸ்** கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 27.10.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.